## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-4 - குரவை ஆய்ச்சியர்
## (கண்ணனுடைய குணசேஷ்டிதங்களை எப்பொழுதும் பேசப் பெற்றமைக்குக் களித்தல்)

3260 * குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும் * குன்றம் ஒன்று ஏந்தியதும் *
உரவு நீர்ப் பொய்கை நாகம் காய்ந்ததும் * உட்பட மற்றும் பல **
அரவிற் பள்ளிப் பிரான் தன் * மாய வினைகளையே அலற்றி *
இரவும் நன்பகலும் தவிர்கிலம் * என்ன குறை நமக்கே[1]? 1

3261 கேயத் தீங்குழல் ஊதிற்றும் * நிரை மேய்த்ததும் கெண்டை ஒண்கண் *
வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும் * மற்றும் பல **
மாயக் கோலப் பிரான் தன் * செய்கை நினைந்து மனம் குழைந்து *
நேயத்தோடு கழிந்த போது * எனக்கு எவ்வுலகம் நிகரே? 2

3262 நிகரில் மல்லரைச் செற்றதும் * நிரை மேய்த்ததும் நீள் நெடுங்கை *
சிகர மாகளிறு அட்டதும் * இவை போல்வனவும் பிறவும் **
புகர் கொள் சோதிப் பிரான் தன் * செய்கை நினைந்து புலம்பி என்றும் *
நுகர் வைகல் வைகப் பெற்றேன் * எனக்கு என் இனி நோவதுவே? 3

3263 நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க * இரங்கிற்றும் வஞ்சப் பெண்ணை *
சாவப் பால் உண்டதும் * ஊர் சகடம் இறச் சாடியதும் **
தேவக் கோலப் பிரான் தன் * செய்கை நினைந்து மனம் குழைந்து *
மேவக் காலங்கள் கூடினேன் * எனக்கு என் இனி வேண்டுவதே? 4

3264 வேண்டித் தேவர் இரக்க வந்து பிறந்ததும் * வீங்கிருள்வாய்
பூண்டு * அன்று அன்னை புலம்பப் போய் * அங்கு ஓர் ஆய்க்குலம் புக்கதும் **
காண்டலின்றி வளர்ந்து * கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும் *
ஈண்டு நான் அலற்றப் பெற்றென் * எனக்கு என்ன இகல் உளதே? 5

3265 இகல் கொள் புள்ளைப் பிளந்ததும் * இமில் ஏறுகள் செற்றதுவும் *
உயர் கொள் சோலைக் குருந்து ஒசித்ததும் * உட்பட மற்றும் பல **
அகல் கொள் வையம் அளந்த மாயன் * என் அப்பன் தன் மாயங்களே *
பகல் இராப் பரவப் பெற்றேன் * எனக்கு என்ன மனப் பரிப்பே? 6

3266 மனப் பரிப்போடு * அழுக்கு மானிட சாதியில் தான் பிறந்து *
தனக்கு வேண்டுருக் கொண்டு * தான் தன சீற்றத்தினை முடிக்கும் **
புனத்துழாய் முடி மாலை மார்பன் * என் அப்பன் தன் மாயங்களே *
நினைக்கும் நெஞ்சுடையேன் * எனக்கு இனி யார் நிகர் நீணிலத்தே? 7

3267 நீணிலத்தொடு வான் வியப்ப * நிறை பெரும் போர்கள் செய்து *
வாணன் ஆயிரம் தோள் துணித்ததும் * உட்பட மற்றும் பல **

[1] குறைவு எனக்கே?

மாணியாய் நிலம் கொண்ட மாயன் * என் அப்பன் தன் மாயங்களே *
காணும் நெஞ்சுடையேன் * எனக்கு இனி என்ன கலக்கம் உண்டே? 8

3268 கலக்க ஏழ் கடல் ஏழ் மலை * உலகேழும் கழியக் கடாய் *
உலக்கத் தேர் கொடு சென்ற மாயமும் * உட்பட மற்றும் பல **
வலக்கை ஆழி இடக்கை சங்கம் * இவையுடை மால் வண்ணனை *
மலக்கு நாவுடையேற்கு * மாறுளதோ இம்மண்ணின் மிசையே? 9

3269 மண் மிசைப் பெரும் பாரம் நீங்க * ஓர் பாரத மாபெரும் போர்
பண்ணி * மாயங்கள் செய்து * சேனையைப் பாழ் பட நூற்றிட்டுப் போய் **
விண் மிசைத் தன தாமமே புக * மேவிய சோதி தன் தாள் *
நண்ணி நான் வணங்கப் பெற்றென் * எனக்கு ஆர் பிறர் நாயகரே? 10

3270 * நாயகன் முழு ஏழுலகுக்குமாய் * முழு ஏழுலகும் * தன்
வாயகம் புக வைத்து உமிழ்ந்து அவையாய் * அவை அல்லனுமாம் **
கேசவன் அடியிணை மிசைக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன *
தூய ஆயிரத்து இப்பத்தால் * பத்தர் ஆவர் துவள் இன்றியே 11

**அடிவரவு:** குரவை கேய நிகரில் நோவ வேண்டி இகல் மனம் நீணிலம்
கலக்க மண் நாயகன் திவள்